செ.வெ.எண்: 760 நாள்: 20.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேர்த்திட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் அறிவுறுத்தல்.**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை சார்பில் பள்ளிச் செல்லா குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான கணக்கெடுப்பு பணி தொடர்பான மாவட்ட அளவிலான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2020-2021 கல்வியாண்டில் பள்ளிச் செல்லா குழந்தைகள் கணக்கெடுப்பு பணி 21.11.2020 முதல் 10.12.2020 வரை மாவட்டத்தில் உள்ள 2725 குடியிருப்பு பகுதிகளில் நடைபெறஉள்ளது. இப்பணியினை தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள்,ஆசிரியர் பயிற்றுநர்கள் சிறப்பாசிரியர்கள், கல்வி தன்னார்வலர்கள் ஆகியோர் ஈடுபட உள்ளனர். இதில் இடை நின்ற குழந்தைகள் (6-14 வரை) மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் (6-18 வயது வரை), புலம்பெயர்ந்த குழந்தைகளை கண்டறியப்பட்டு பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

மேலும் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள்,ஆசிரியர் பயிற்றுநர்கள் சிறப்பாசிரியர்கள், கல்வி தன்னார்வலர்கள் ஆகியோர் மாவட்டத்தில் பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து சிறப்பு கவனம் எடுத்து அவர்களை பள்ளியில் சேர்த்திட பிற துறை அலுவலர்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் பெற்றோர்களும் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்கி அனைத்து குழந்தைகளும் பள்ளிகளில் சேர்த்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்

இக்கூட்டத்தில் பயிற்சி ஆட்சியர் திரு.எம்.பி அமித் இ.ஆ.ப,தஞ்சாவூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. மா. இராமகிருட்டிணன், உதவித் திட்ட அலுவலர் திரு. அ.ரமேஷ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி அலுவலர், மாவட்ட சமுக நலத்துறை அலுவலர், மாவட்ட தொழிலாளர் நல அலுவலர். சைல்டு லயன் அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டார பொறுப்பு மேற்பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.